# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



Local body 179

<u>பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்</u>

நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை பல்கலைநகர் புதுநகர் வளர்ச்சிக்குழுமப்பகுதி,
உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ)அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்- திரு.அ.விஜயன், பி.இ.,

ந.க.எண். 1662/2021/பபுவகு.

நாள்- 20 .09.2021.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை பல்கலைநகர் புதுநகர் வளர்ச்சிக்குழுமப் பகுதி - மதுரை மாவட்டம் - திருமங்கலம் வட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கிண்ணிமங்கலம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள். 56/4A, 56/4B, 56/5A, 56/5B2, 56/5B3, 60/7A & 60/7B -ல் அமையும் 3.30ஏக்கர் (13410.00ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் / திட்ட அனுமதி - வழங்குதல் – குறித்து.

பார்வை:

1) மனுதாரர் திரு.P.செல்வராஜ், மதுரை என்பவரின் கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள். 20.04.2021, 27.04.2021, 08.07.2021 (பதிவு எண். 202105001012120, நாள்.29/03/2021).
2) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை பல்கலைநகர் புதுநகர் வளர்ச்சிக்குழும கடிதம் ந.க.எண். 2825/2021/பபுவகு. நாள். 15.07.2021.
3) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
4) மதுரை பல்கலைநகர் புதுநகர் வளர்ச்சிக்குழும தீர்மானம் எண். 01/2021, நாள். 05.05.2020.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
6) அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
9) மனுதாரர் திரு.P.செல்வராஜ், மதுரை என்பவரிடமிருந்து தானபத்திர அசல் ஆவணங்கள் பெறப்பட்ட நாள். 17.08.2021.
10) உத்தேச மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண். 1936/2021 நாள்-13.08.2021.

P. Selvaraj

11) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண். 1937/2021 நாள்-13.08.2021.
12) அரசு கடிதம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை. சென்னை-09, அவர்களின் கடிதம் எண்.8449.நவ4(3)/2020-2, நாள்.-23.09.2020.
13) நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ.பொ) சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-7671/2020/T(2),நாள்-25.09.2020.
14) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை, நாள்-09.12.2020.
15) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ நாள்-18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021

*******

**உத்தரவு**

பார்வை 1 -ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுலக கடிதம் நாள்.16.08.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 09-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர ஆவணம் எண்: 1936/2021 நாள்-13.08.2021 - ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம.ப.பு.வ.கு.எண். 01/2021 என எண்ணிடப்பட்டு. தொழில்நுட்ப அனுமதியும். மேற்படி உத்தேசகுடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை(3)-ல் கண்ட அரசாணையின், விதி(4)-ன்படியும் திட்ட அனுமதி எண்.01/2021 என எண்ணிடப்பட்டு. 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

...3...

P. Selvaraj

<u>சிறப்பு நிபந்தனை:</u>

1. (a) பார்வை 14-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 3-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 06 மற்றும் 07-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

P. Selvaraj

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை (14) மற்றும் (15) கண்டுள்ள அரசாணையின்படி, உரிய உள்ளாட்சியிடமிருந்து மனுதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெற்றுகொள்ள வேண்டும்.

20/09/21

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
மதுரை மாவட்டம்.

20/9/21

**இணைப்பு**

1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் - 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 2
2) **அசல் தானப்பத்திர ஆவணம் எண்.** 1936/2021 நாள்-13.08.2021.(20-**தாள்கள்.**)

பெறுநர்

**ஊராட்சி தலைவர்,**
**கிண்ணிமங்கலம் ஊராட்சி,**
**மதுரை மாவட்டம்.**

நகல்

1) **திரு.P.செல்வராஜ்,**
**கதவு எண்-66, T.P.K மெயின் ரோடு,**
**வசந்த நகர், மதுரை 625003.** — கடித நகல் மட்டும்

2) தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம், **(TNRERA)**
1A, முதல் தளம்,காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர்,சென்னை -600008.

3) தொழில்நுட்பவைப்பறைக்கு -1 வரைபடம்
நிபந்தனைகள் -1

4) கோப்பு - வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் -1

P. Selvaraj

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை பல்கலைநகர் புதுநகர் வளர்ச்சிக்குழுமப்பகுதி,
மதுரை மாநகராட்சி.

**கோப்பு எண்.1662/2021/பபுவகு.** நாள்.20 .09.2021

**மனைப்பிரிவு ம.வ/ம.ப.பு.வ.கு.எண். 01/2021**

**மனைப்பிரிவு நிபந்தனைகள்**

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையில் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும். மணையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விறகவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

P. Selvaraj

8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அதிகாரிகளால் தொடர்பு கொண்டு ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப் பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

P. Selvaraj

# அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

**மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், கின்னிமங்கலம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள். 56/4A, 56/4B, 56/5A, 56/5B2, 56/5B3, 60/7A & 60/7B - ல்**

| விவரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | **3.30ஏக்கர் (அ) 13410.00ச.மீ** |
| ஒதுக்கிய மனைகள் | - | **58 எண்ணம்** |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | | |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | **3304.29ச.மீ** |
| 2.பூங்கா | | **1280.82ச.மீ (12.67%)** |
| பொது ஒதுக்கீடு<br>TNCD & BR 2019, விதி-47(8) -ன்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட 1% ஒதுக்கீடு) | | |
| 1.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | **56.16ச.மீ (0.55%)** |
| 2. தமிழ்நாடு மின்உற்பத்தி (TANGEDCO) ஒதுக்கீடு | - | **53.04ச.மீ (0.52%)** |

**நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019-பிஏ2, நாள்-05.02.2020-ல் Case-VI –ன்படி பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

20/09/21

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

P Selvaraj

20/9/21

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கிண்ணிமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.S.மயில்முருகன்,B.A.,

கோப்பு எண். 01/2021/கி.ஊ

நாள் : 20.10.2021

பொருள் : புதிய குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு அனுமதி அளித்தல் மதுரை மாவட்டம்-திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்-கிண்ணிமங்கலம் ஊராட்சி,கிண்ணிமங்கலம் கிராமம் சர்வே எண்கள். 56/4A, 56/4B, 56/5A, 56/5B2, 56/5B3, 60/7A & 60/7B —ல் கட்டுப்பட்ட மனைப்பிரிவில் மனை எண். 1 முதல் 58 வரைக்கான சுமார் 3.30 ஏக்கர் (13410.00 சதுர மீட்டர்) பரப்பளவில் அமையும் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி வழங்கி வரப்பெற்றது ஊராட்சியின் மூலம் மனையின் ஸ்தல ஆய்வு செய்து மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்குதல்-தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை (நிலை) எண்.255/ ஊரக வளர்ச்சி (2) மற்றும் ஊராட்சிகள் துறை நாள் : 18.08.1997
2) அரசாணை எண்.78 (ம) 79 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை. நாள் : 04.05.2017
3) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 13.10.2017
4) அரசாணை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 05.02.2019
5) அரசாணை எண்.154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 13.10.2020
6) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 09.12.2020
7) உயர்திரு.மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தெளிவுரை கடிதம் ந.க.எண்.1780/2021/அ2/கி(ஊ) நாள் : 03.09.2021
8) மதுரை பல்கலை நகர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.1662/2021/பபுவகு நாள் : 20.09.2021
9) மனுதாரர் திரு.P.செல்வராஜ், த/பெ.பெரியகருப்பத்தேவர், வசந்த நகர், மதுரை-03 என்பவர் எழுதி கொடுத்த வழக்கு தொடர்பான உறுதிமொழி கடிதம் நாள் : 18.10.2021
10) மனுதாரர் திரு.P.செல்வராஜ், த/பெ.பெரியகருப்பத்தேவர் என்பவர் கிண்ணிமங்கலம் ஊராட்சிக்கு எழுதிக் கொடுத்த ரோடு மனையிடங்களுக்காகவும், பூங்கா இடத்திற்காகவும் (OSR AND) பொது (ஒதுக்கீடு) இனாம் சாசனம் எண்.1936/2021 நாள் : 13.08.2021 (சார்பதிவாளர், செக்கானூரணி).
11) மனுதாரர் திரு.P.செல்வராஜ், த/பெ.பெரியகருப்பத்தேவர் என்பவர் மேற்பார்வை பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கடிதம் மதுரை (TANGEDCO) அவர்களுக்கு எழுதி கொடுத்த பொது ஒதுக்கீடு (OSR AND) சாசனம் எண்.1937/2021 நாள் : 13.08.2021
12) மனுதாரர் திரு.P.செல்வராஜ், த/பெ.பெரியகருப்பத்தேவர் என்பவர் மனு நாள் : 13-10-2021
13) கிண்ணிமங்கலம் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண். 100/2021-2022 நாள் : 13-08-2021

-----

அனுமதி ஆணை :

மதுரை மாவட்டம், வசந்த நகர், TPK மெயின் ரோடு, கதவு எண்.66-ல் வசிக்கும் திரு.P.செல்வராஜ், த/பெ.பெரியகருப்பத்தேவர் என்பவருக்குச் சொந்தமான புதிய குடியிருப்பு

P. Selvaraj

மனைப்பிரிவு மனைகளுக்கு அனுமதி வழங்கிட வேண்டி விண்ணப்பிக்கப்பட்டதை தொடர்ந்து கிண்ணிமங்கலம் ஊராட்சி, கிண்ணிமங்கலம் கிராமம், சர்வே எண்கள். 56/4A, 56/4B, 56/5A, 56/5B2, 56/5B3, 60/7A & 60/7B -ல் கட்டுப்பட்ட மனை எண்கள். 1 முதல் 58 வரையிலான மனைகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல்/திட்ட அனுமதி வேண்டி இணைய வழி பதிவு மேற்கொண்டதை தொடர்ந்து பார்வை 8-ல் காணும் நடவடிக்கைகளின் வழி வரப்பெற்ற வரைபடத்தில் மதுரை பல்கலை நகர், புதுநகர் வளர்ச்சிக் குழுமப்பகுதி உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1662/2021/பபுவகு நாள் : 20.09.2021-ன்படி தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1 மற்றும் 2-ல் காணம் அரசாணைகள் மற்றும் பார்வை 7, 8-ல் காணும் கடிதம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பாாவை 13-ல் காணும் கிண்ணிமங்கலம் ஊராட்சி தீர்மானத்தின் அப்படையில் ஒரு ஏக்கருக்கு ரூ.1000/- வீதம் 3.30 ஏக்கருக்கு ரூ.3500/- வங்கி வரைவோலை மூலம் அங்கீகார கட்டணமாக மனுதாரர் செலுத்தியுள்ளார்.

மேலும் பார்வை 9-ல் காணும் உறுதிமொழி பத்திரத்தில் மனுதாரருக்குச் சொந்தமான இடம் நிலம் கையகப்படுத்தும் நிலச் சீர்திருத்தம் சட்டம் 1961-ன் கீழ் இந்நிலங்கள் கவரப்பட்டால் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் 1978-ன் கீழ் பாதிப்பு ஏற்பட்டால் இவ்வுத்திரவு ரத்து செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

பாாவை 10, 11-ல் காணும் சாலை இனாம் (OSR LAND) சாசனத்தின்படி மேற்படி மனை இடத்திற்கான சாலையினை கிண்ணிமங்கலம் ஊராட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மதுரை அவர்களுக்கும் தானமாக பதிந்து கொடுத்துள்ளார்.

எனவே பார்வை 8-ல் காணும் உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர் (பொ) அவர்களது கடிதம் மற்றும் பார்வை 9-ல் காணும் உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றின்படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கிண்ணிமங்கலம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்கள் 56/4A, 56/4B, 56/5A, 56/5B2, 56/5B3, 60/7A & 60/7B—ல் கட்டுப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் அமையப் பெற்ற மனை எண்கள். 1 முதல் 58 வரையிலான மனையிடங்களுக்கு அனுமதி வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1) மதுரை உறுப்பினர் செயலர், "பல்கலை நகர், புதுநகர் வளர்ச்சிக்குழுமம் மூலம் வரைபடம் செய்யப்பட்டு குடியிருப்பு மனைகளாக பிரிக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. மதுரை பல்கலை நகர் புதுநகர் வளர்ச்சி குழுமம் மூலம் வழங்கப்பட்ட வரைபடத்தில் பின்னர் முன் அனுமதி ஏதும் இல்லாமல் அளவுகளில் மாற்றம் செய்து கொள்ளக் கூடாது.

2) மனை அங்கீகாரம் செய்வதற்கு அரசாணையின்படியான வளர்ச்சிக் கட்டணம் மற்றும் வரன்முறைப்படுத்துவதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் அடிப்படையில், மனை அங்கீகாரம் செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுத்தரவு அளிபபதற்கு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின்படி வரைபடத்துடன் உள்ள மனைகளுக்கு அனுமதி வழங்கிட வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்பட்டது.

P. Selvaraj

சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் மூலம் தீர்வு பெற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமை குறித்து முடிவு செய்ய உள்ளாட்சி அமைப்பு பொருத்தமான அமைப்பு அல்ல.

3) மனைகளின் சாலைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஊராட்சி இடமானது நிர்வாகத்தினால் தீர்மானம் இயற்றப்பட்டு, சாலைக்கான இடம் கையகப்படுத்தும் நிகழ்வில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்க இயலாது. அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கும் நிகழ்வில் இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.

4) மனைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது. மனையில் கட்டப்படும் வீடுகளுக்கான கட்டிட வரைட அனுமதி பெற தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

5) மனை உரிமைதாரர் சாலைகளின் ஓரங்களில் இருபுறங்கள் மரக்கன்றுகளை நடவு செய்து பாதுகாக்க வேண்டும்.

6) சாலையோரங்களில் வளர்க்கப்படும் மரங்கள் அனைத்தும் ஊராட்சிக்கு சொந்தமானதாகும். மனை உரிமைதாரர் எவ்வித உரிமையும் கோர இயலாது.

7) மனை தொடர்பாக ஏதேனும் நீதிமன்ற வழக்குகள் இருப்பின் அதனை தாங்களே தங்களது சொந்த செலவில் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிமன்ற தீர்ப்பில் அனுமதி ரத்து செய்திட தெரிவிக்கும்பட்சத்தில் இவ்வுத்தரவு உடன் ரத்து செய்யப்படும்.

8) மனையின் நடுவே உயர் / குறைந்த அழுத்த மின் கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலையின் போக்கில் மனுதாரர் மின் வாரியத்தை தொடர்பு கொண்டு, தனது சொந்த செலவில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

9) மனையின் நடுவே போக்கு கால்வாய் செல்லுமாயின், அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

20/10/2021

தலைவர் / செயலர் அலுவலர்
ஊராட்சி மன்றம்
கிண்ணிமங்கலம் ஊராட்சி

பெறுநர் :
மனுதாரர் திரு.P.செல்வராஜ்
த/பெ. பெரியகருப்பத்தேவர்
கதவு எண்.66. TPK மெயின் ரோடு
வசந்த நகர், மதுரை.

நகல் : உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 4, ஹக்கீம் அஜ்மல்கான் ரோடு, சின்ன சொக்கிகுளம், மதுரை-2 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுரை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள், திருமங்கலம்

P. Selvaraj

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate